<u>சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்</u>

**<u>OS.No. 850 / 2022</u>**

வா.சா.1. செல்வமணி 20.09.2024

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:

எனக்கும் வடிவேல் என்பவருக்கும் 1992-ல் திருமணம் ஆனதாக நான் எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு சிறிது காலம் கோயம்புத்தூரிலும் அதற்கு பிறகு கேரளா மாநிலத்திலும் குடியிருந்து வந்தோம் என்றால் சரிதான். (சாட்சி தற்போது நான் கேரளா மற்றும் கோயம்புத்தூரில் இல்லை என்றும் இங்கு தான் இருந்தோம் என்று சாடசியம் அளிக்கிறார்.) எனது கணவர் கேராளவிற்கு சென்ற போது தான் இறந்துவிட்டார். அந்த காலகட்டத்தில் நான் எனது கணவருடன் கேரளாவில் வசித்து வந்தேன் என்றால் சரிதான். எனக்கு நந்தினி மற்றும் மணிரத்தினம் என்ற இரண்டு மக்கள் இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். நந்தினிக்கு 2016-ம் ஆண்டு திருமணம் நடைபெற்றுவிட்டது என்றால் சரிதான். அந்த திருமணத்திற்கு எனது அண்ணன் 1-ம் பிரதிவாதி அவரது குடும்பத்துடன் கலந்து கொண்டு சீர்வரிசைகள் எல்லாம் செய்தார் என்றால் சரியல்ல. அந்த திருமணத்தின் போது எனது அண்ணன் 10 பவுன் நகைளை எனது மகளுக்கு போட்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் அப்போது சீர்வரிசைகளை வாங்கிக்கொண்டு தற்போது வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு 6 மாதத்திற்கு முன்பு வரை எனது அண்ணன் குடும்பத்திற்கும் எனது குடும்பத்திற்கும் சுமுகமான உறவு இருந்தது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் பிரதிவாதிகள் என்ன பதில் அளித்துள்ளார்கள் என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு நர்ன தான் வழக்கறிஞருக்கு விபரம் சொன்னேன் என்றால் எனது மகன், மகள், மருமகன் ஆகியோர்கள் ஆவணங்களை கொடுத்தார்கள். எங்கிருந்து ஆவணங்களை வாங்கி கொடுத்தார்கள் என்றால் கிராம நிர்வாக அலுவலரிடம் வாங்கி வந்து கொடுத்தார்கள். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. சர்வே எண்.303-ல் கட்டுப்பட்ட சொத்துக்கள் கந்தசாமிகவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். எனது தாத்தாவும் அவரது மனைவி முத்தமாளும் சேர்ந்து 1979, 1980ல் சர்வே எண்.303-ல் கண்ட சில சொத்துக்களை 7-ம் பிரதிவாதி, 8-ம் பிரதிவாதியான கருப்பணகவுண்டர் மற்றும் செல்லாத்தாள் ஆகியோர்களுக்கு கிரையம் செய்துள்ளார் என்றால் சரிதான். செல்லாத்தாள், 9-ம் பிரதிவாதி விஜயராணிக்கு என்ன உறவுமுறை

என்றால் எனக்கு தெரியாது. 7-ம் பிரதிவாதி, 8-ம் பிரதிவாதியான கருப்பணகவுண்டர் மற்றும் செல்லாத்தாள் ஆகியோர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட இடம் கிழமேல் பாதையும் தென்புறம் உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் தற்போது ஆயில் மில் மற்றும் மாவு மில் உள்ளது என்றால் சரிதான். ஆயில் மில் மற்றும் மாவு மில் கட்டப்பட்டு எவ்வளவு வருடம் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கும் எனது கணவர் வீட்டிற்கும் இடையே எவ்வளவு கி.மீது தூரம் இருக்கும் என்றால் 1 கி.மீ தூரம் இருக்கும். சர்வே எண்.303 சம்மந்தமாக பாக பிரிவினை செய்யும் பொழுது பாகஸ்தர்கள் கிழமேல் பாதை ஒன்றை வைத்து இருபுறமும் நிலங்களை பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். எனது அப்பா, எனது அண்ணன் ஆகியோர்கள் அ அட்டவணை சொத்து பாகஸ்தர்களாகவும், காளியப்பகவுண்டர் இறந்துவிட்டதால் அவரது மனைவி முத்தம்மமாள் மற்றும் பழனிச்சாமி பி அட்டவணை சொத்து பாகஸ்தர்களாகவும், 6-ம் பிரதிவாதி, அவரது அப்பா பழனியப்பகவுண்டர், ஆகியோர் சி அட்டவணை சொத்து பாகஸ்தராகவும இருந்து 1991-ல் சர்வே எண்.303 சம்மந்தமாக ஒரு பாக பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.303 கண்ட சொத்துக்களை இந்த பாக பிரிவினை வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் சேர்த்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் சர்வே எண்.303-ல் காட்டப்பட்ட சொத்துக்கள் சதுரஅடியில் மட்டும் தான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 4-ம் பிரதிவாதி வேலாத்தாள் எனது தகப்பனாரிடம் இருந்து தான் கிரையம் பெற்றார். வேலாத்தாள் சர்வே எண்.303-ல் தான் கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனது தகப்பனார் விற்றதும் வேலாத்தாள் வாங்கியதும் எனக்கு தெரியாது. வேலாத்தாளை என்ன காரணத்திற்காக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் வேலாத்தாள் சர்வே எண்.303-ல் சொத்துக்களை வாங்கியுள்ளதால் அவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன். வேலாத்தாள் அந்த இடத்தில் சொத்துக்களை வாங்கிய பிறகு வெங்கடாச்சலம் ஸ்டோர் மளிகை கடை வைத்து கடை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். அந்த கடையின் மேல் 2 மாடி கட்டி அவர் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அந்த கடை, அதன் மேல் உள்ள வீடு கட்டி 25 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும் என்றால் சரிதான். வேலாத்தாள் அவர் கிரையம் பெற்ற சொத்தில் அந்த கடை, அதன் மேல் உள்ள வீடு கட்டும் பொழுது நான் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரிதான். 1194-ல் கொடிவழியில் கண்ட கந்தசாமியின் வாரிசுகள் சர்வே எண்.303-ல் 5705 சதுர அடி நிலத்தை 5-ம் பிரதிவாதி ராசியப்பனுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. 5-ம் பிரதிவாதி ராசியப்பன் அந்த இடத்தில் கிரையம் வாங்கியதால் அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்து தாக்கல் செய்துள்ளேன். வேலாத்தாள் வாங்கிய இடம் தனியாக உட்பிரிவு செய்யப்பட்டு அவரது பெயரில் தனிப்பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 5-ம் பிரதிவாதி

ராசியப்பனுக்கு கிரையம் செய்த போது எனது அப்பா, எனது அண்ணனுக்கும் வந்த தொகையை எனக்கும் எனது கணவருக்கும் தான் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் பைனான்ஸ் தொழில் செய்துவதற்காக அந்த தொகையை எங்களுக்கு தான் கொடுத்தார்கள் என்றும் தற்போது நான் அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1996-ல் 1-ம் பிரதிவாதி மற்றும் அவரது தகப்பனார், காளியப்பகவுண்டரின் மனைவி முத்தம்மாள் மற்றும் மகன் பழனிச்சாமி, 6-ம் பிரதிவாதியின் தகப்பனார் ஆகியோர்கள் சேர்ந்து 6-ம் பிரதிவாதிக்கு சர்வே எண்.303-ல் 3079 1/4 சதுரடி நிலத்தை கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். கருப்புச்சாமி அவர் கிரையம் பெற்ற இடத்தில் கார் செட் அமைத்து அதை வாடகைக்கு விட்டு வருகிறார் என்றால் சரிதான். 1991 பாகபிரிவினை, 1994 மற்றும் 1996 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட கிரையத்திற்கு பின்னிட்டு சர்வே எண்.303யை 22.01.1998-ம் தேதி மேலே கண்ட 6 நபர்கள் பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. எனது மாமனார் பெயர் கருப்பணகவுண்டர் என்றால் சரிதான். அவருக்கு சொந்தஊர் நல்லூர்பட்டி. 1998ம் ஆண்டு பாக பிரிவினை பத்திரத்தில் எனது கணவர் தான் முதல் சாட்சியாக சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பாகபிரிவினை விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றும் தெரிந்ததால் தான் எனது கணவரே வந்து சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 4-ம் பிரதிவாதி வேலாத்தாள் சர்வே எண்.303-ல் கட்டுப்பட்ட இடங்களில் 2 நிலங்களை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். பிரதான சாலையை ஒட்டி தான் மளிகை கடை உள்ளது என்றால் சரிதான். கிழமேல் பாதை ஒட்டி தென்புறம் உள்ள இடம் வேலாத்தாள் வாங்கிய 2-வது கிரையத்திற்கு கட்டுப்பட்ட இடம் என்றால் சரிதான். அந்த இடத்தை எனது தகப்பனார் மற்றும் சகோதரர்களிடம் இருந்து தான் வேலாத்தாள் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த இடத்தில் மளிகை கடைக்கான குடோனாக கீழே கட்டிடம் கட்டி மேலே முதல் மாடியில் தற்போது அவர் குடியிருந்து வருகிறார் என்றால் கட்டிடம் உள்ளது. ஆனால் அந்த கட்டிடத்திற்குள் என்ன இருக்கிறது என்று எனக்கு தெரியாது. வேலாத்தாள் வீட்டிற்கு தென்புறம் எனது சித்தப்பா மகன் பழனிச்சாமி வீடு உள்ளது. பழனிச்சாமி வீடுகட்டியுள்ள இடம் அவருக்கு பாக பரிவினையில் ஒதுக்கப்பட்ட இடத்தில் தான் அவர் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அந்த வீட்டின் மதிப்பு 20 இலட்சம் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. பழனிச்சாமி வீடுகட்டியுள்ள இடத்தை இந்த வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். பழனிச்சாமியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கும் பழனிச்சாமி, அவரது அம்மா முத்தம்மாள் ஆகியோர்களிடையே சுமுகமான உறவு இருந்து வருகிறது என்றால் சரிதான். 7 முதல் 11 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற இடங்களை நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. சேர்த்துள்ளேன். 7 முதல் 11 பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ள இடங்களை

நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றும் நான் இந்த வழக்கிற்காக அவ்வாறு சேர்த்துள்ளேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராது 3 முதல் 9 இலக்க சொத்துக்களில் கட்டிடங்கள் இருக்கும் விபரத்தை மறைத்து காலியிடமாக காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளேன். வழக்கின் பிராதில் காலியிடம் என குறிப்பிட்டுவிட்டு தற்போது கட்டிடங்கள் உள்ளது என்று வழக்கிற்கு முரண்பட்டு நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 6-ம் பிரதிவாதி கார் செட் வைத்துள்ள இடத்திற்கு வடபுறம் எனது அண்ணன் 1-ம் பிரதிவாதி மளிகை கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். சர்வே எண்.303ல் கட்டுப்பட்ட நிலங்கள் சம்மந்தமாக 1979-முதல் 1998ம் ஆண்டு வரை கிரையம் மற்றும் பாக பரிவினை ஆகிய ஆவணங்கள் மூலம் சொத்துக்கள் எனக்கு தெரிந்தே பரிமாற்றம் நடந்துள்ளது என்றும் அதனால் சர்வே எண்.303 யை பொறுத்து எனக்கு எவ்வித பாகமும் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. அதனால் எனது வழக்கு காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒட்டன்சத்திரம் தாலுகா வட்டார வழக்கப்படி 2000-ல் இருந்த 2015-ம் ஆண்டு வரை பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்து கடன் வாங்கும் வழக்கம் இருந்து வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தற்போதைய நடைமுறையில் கிரைய பத்திரமாக எழுதிக் கொடுத்தது கடன் வாங்கப்படுகிறது என்றால் சரிதான். எனது தகப்பனாரும் எனது அண்ணனும் சிவராஜ் என்பவரிடம் கடன் வாங்கி கொண்டு 2001-ம் ஆண்டு பொது அதிகார ஆவணம் பொறுப்புக்காக எழுதிக் கொடுத்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 3-ம் பிரதிவாதி ராஜாமணியை அவர் தனியாக சொத்தை கிரயம் பெற்றுள்ளதால் தான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன். ராஜாமணி வீடு மற்றும் காலியிடத்தை தான் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். இந்த வழக்கில் ஏற்கனவே நடைபெற்ற பாகபிரிவினை மற்றும் கிரைய பத்திரங்கள் செல்லாது என குறிப்பிட்டு எந்த பரிகாரமும் நான் கேட்கவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். ஏற்கனவே நடைபெற்ற பாகபிரிவினை பத்திரங்கள் மற்றும் கிரைய ஆவணங்களை ஏற்றுக்கொண்டதால் தான் நான் அவைகள் செல்லாது என குறிப்பிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு மட்டுமே வழக்கு முன்னறிவிப்பு கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் சர்வே எண்.339 என்று குறிப்பிட்டுள்ள 1, 2 இலக்க சொத்துக்கள் பூர்விகமாக அல்லது எனது தகப்பனாரால் கிரையம் பெற்ற தனிப்பட்ட சொத்தா என்றால் எனக்கு நம்பர் தெரியாது. ஆனால் அது எனது தகப்பனாருக்கு தனிப்பட்ட சொத்து. எனது தகப்பனார் 2012-ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்த பின்பு 1ம் பிரதிவாதியான எனது அண்ணன் 1, 2 இலக்க சொத்துக்களில் ஒரு கிணறு, இரண்டு ஆழ்துளை கிணறு அமைத்து சொட்டுநீர் போட்டு விவசாயம் செய்து

வருகிறார் என்றால் சரிதான். எனது அண்ணன் 1, 2 இலக்க சொத்துக்களை மேம்படுத்தி சீர்திருத்தம் செய்யும் பொழுது நான் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரியல்ல, செய்தேன். எந்த தேதியில் அவ்வாறு நான் தடுத்தேன் என்றால் தேதி ஞாபகமில்லை. அவ்வாறு நான் சென்று தடுத்தது சுமார் 4 வருடம் இருக்கும். எனது அண்ணன் நிலத்தை சீர்படுத்தியது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் அது போன்று எந்த தடுதலும் செய்யவில்லை என்றும் அதனால் தான் நான் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது தாத்தா கந்தசாமிகவுண்டரின் அனைத்து சொத்துக்களும் இந்த வழக்கில் சேர்க்கப்படாத தோசத்தாலும் கந்தசாமிகவுண்டர் வாரிசுகள் அனைவரையும் சேர்க்கப்படாத தோசத்தாலும் இந்த வழக்கு பாதிப்படைந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதனால் எனது வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

(4, 6 பிரதிவாதிகள் 1 முதல் 3 பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணையையே ஏற்றுக் கொள்ளப்படுகிறது.)

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2024.09.20 17:39:31 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்